உ

கணபதி துணை

வருத்தலைவிளான்-மருதடிவிநாயகர்

# இருபாவிருபஃது



இஃது

வித்துவான்: சி. கணேசையர் அவர்களால்

இயற்றப்பட்டு

ஷையூர்

ஸ்ரீமான். வ. செந்திவேற்பிள்ளையவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.

மூன்றும் பதிப்பு.

ஆனந்தகுமரன் அச்சகம்

1949.

உ

கணபதி துணை

# வருத்தலைவிளான்
# மருதடி விநாயகர்
# இருபாவிருபது

## காப்பு

### வெண்பா

மருதடியின் மேவு மதமா முகத்தோற்
கிருபா விருபதனை யாத்துத் — திருமருவ
எத்திப் புனைதற் கிருந்துணையா மங்கவன்றன்
மாத்திகழும் பாத மலர்,

## நூல்

### வெண்பா

திருமா மகளுந் திகழ்கல்வி மாதும்
ஒருவா வருத்தலையா மூரிற் — றருமா
மருதடிவா ழைங்கரத்து மாமுதல்வன் பாதம்
கருதடியார்க் கில்லைவினைக் கட்டு.

[ கட்டு = பந்தம். ]

### அகவற்பா

கட்டுசெஞ் சடைக்கண் வட்ட மதிகொளும்
எட்டு வான்குணத் திறைவன் றிருவடி
பூசனை புரிதற் காசிலா நீர்பெறக்
கண்ணு யிரத்து விண்ணோர் தலைவன்
காழி வனத்திடை ஊழின் மலர்கொடு
நின்னை வழிபாஇ வேண்டிநின் றிடவே
அங்கவற் கிரங்கி யகத்தியன் றனது
கரகங் கவிழ்த்துக் காவிரி கொடுத்தும்
முனியும் வேண்ட முன்புபோற் கரகத்
தந்நீர் குறைபா தள்ளிக் கொடுத்த
இறைவ வுன்றனக் கெவைசெய லரிய
வானினை முட்டும் வான்சினை மருதின்
மூலந் தோன்றிய முக்கட் செல்வ !

நின்றன தருளா லென்றன துளத்து
மன்னிய பிணியும் மற்றுடற் பிணியும்
போக்கிநின் னடிக்கீ ழாக்கி யாளுவை
சிவன்முன் றந்த செல்வநின் பொற்கழல்
அடையுஞ் செல்வ மன்றிப்
பிறிது முளதுகொல் பெறுவதற் குலகே. (உ)

[ ஆசு — குற்றம். காழி - ஸ்ரீகாழி. வனம் - காடு. ]

வெண்பா

உலகு முதற்போற்ற வுற்றங் கிடர்தீர்
அலகில் பெருங்கருணை யையன் — இலகுசடை
துங்கப் பிறைதிகழத் தொன்மருதின் கீழுறையும்
புங்கவனே யெற்கோர் புகல்.

அகவற்பா

புகலரு நின்சீர் போற்றி வழிபடூஉம்
அன்பின் மிக்கவுன் அடிமையா ளர்க்கும்
தரும்பொரு ளிலாது பெரும்பசி கொண்டு
அறிவு மழிவுறூஉம் வறுமையா ளர்க்கும்
உழந்துமெய் வருந்து முறுபிணி யாளர்க்கும்
விருந்தினர் தமக்கும் விரும்புமுன் கோயிற்
பணிக்கு மீயாது கணித்துமிக வீட்டி
வைத்தங் கிழக்கு மித்தமை மாந்தாபோல்
மெய்ப்பொரு ளறியாது பொய்ப்பொருள் போற்றிப்
பிறந்து மிறந்தும் பெருந்துயர் பொருந்தியான்
எய்யா வண்ணம் ஐயா நின்னருள்
தந்தெனை யாள்வாய் தாரகந் தனிற்போல்
உயர்மா மருதடி யுறமூ லத்தும்
மதமா முகமொடு மருவும்
ஆறு வாகுவி னேடும் பெருமனே. (ங)

[ எய்த்தல் - இளைத்தல். தாரகம் - பிரணவம். ]

வெண்பா

பெருமானே யன்றொருநாட் பின்னவற்கா வேழத்
துருவாகி வள்ளிமுன ரும்போய் —, திருமான்
மருகா மருதினடி மன்னுமொரு தேவா
உருகா வெனையாள வுன. (ச)

## அகவற்பா

உன்னரு ளாலென் மன்னிருள் போக்கிமுன்
நிலைதனைத் தந்தெனை யலையா தாளுவை
தலையா னுன்பெருந் தனிக்கழல் பணிந்துங்
கண்ணா லொளிகொளுங் கவினுருக் கண்டும்
மூக்கா லன்புடன் மோந்துங் காதான்
நின்பெரும் புகழினை நீளக் கேட்டும்
வாயான் வாழ்த்தியுங் கையாற் றொழுதும்
நெஞ்சா லெந்த நேரமு நினைந்தும்
தாளா னின்னுயர் தலம்வலம் வந்தும்
ஐந்து காத்தெம் மாதி முதல்வ!
உன்றனை வழிபடூஉ யுவப்ப தல்லது
நாயேன் பிறிதுதொழி னயந்திங் குறியேன்
என்குலத் தந்தணர் நின்னடித் தொண்டினை
வழிவழி செய்து வாழும் புன்னைமா
நகரினை மேவிய நற்றமி ழறிஞர்போல்
வியார் மருதடி மேவுமூ லத்தும்
உற்றே யருள்செயும் உயர்பரம் பொருளே. (௬)

## வெண்பா

பொருளுங் கலையும் புடவியொடு மற்றும்
அருளும் படிவேண்டே னையா — தெருளு
மறையதன்மூ லத்தும் மருதடிமூ லத்தும்
உறைமுதலே வேண்டுவனுன் றாள். (௭)

[கலை - கல்வி. புடவி - நிலம்.]

## அகவற்பா

நாளினிற் பெரும்பொரு ளுழந்துமிக வீட்டித்
தாமு முண்ணாது பிறர்க்கு மீயாது
கன்று முண்ணா கலத்தினும் படாது
நல்லான் றீம்பா லிலத்துக் காங்குப்
பயனின்றிக் கழிய வைத்தங் கிழக்கும்
மாந்தர்தம் மறிவினை மறந்தும் பெறாஅது
நின்றமர்க் களித்துந் நினதுபணிக் குதவியும்
நன்றுபுரிந் துய்யு நல்லுணர் வதனை
என்றனக் கருளிய இறைவநின் பதங்கள்
கூடிப் பரிசின் வீடும் பெற்றே

இன்புறு மாறிங் கன்புட னருளுவை
மருதின் மூலத்து மருவும்
ஆனை மாமுகத் தைந்துகரத் தோனே. (௮)

[ தாள் - முயற்சி. உழந்து — வருந்தி.]

## வெண்பா

ஐந்து கரமு மருளொடொளிர் முக்கண்ணும்
இந்து விளங்கு பெழிற்சடையும் — தந்தமுறும்
வேழ முகமும் விளங்க மருதின்கீழ்
வாழுமிறை யெற்கோர்மருந் தாம். (௯)

## அகவற்பா

மருந்தெனக் கருதினு மருந்தா கும்மே
வைப்பெனக் கருதினும் வைப்பா கும்மே
மற்றெனக் குயர்தரு மாமரு தடியின்
மூலத்து முளைத்து மூவுல குந்தன்
கதிரொளி பரப்புங் களிற்றுமா முகத்து
முக்கட் செல்வன் முழுநல கனிகரும்
மூவா முகுந்தற்குத் தீவாய் நஞ்சத்
தரவின் பெருவடி வகற்றி யருளிய
ஒருபெருங் கடவு ளிருகழ லடியே. (௧௦)

[மூவா - அழிவில்லாத. அரவு - பாம்பு.]

## வெண்பா

அடியேற் கருளு மரியகுரு நாதா
குடிகொண் டெனுள்ளங் குலவிப் — படிமீது
வீழாமற் காத்தெனது மெய்யை மருதினடி
வாழும் பெருமானே வை. (௧௧)

## அகவற்பா

வையக மதவோ வாணெழு கதிரின்
நுண்ணணுப் புரைய நூறுபல் கோடியா
விண்ணிடை விளங்கி மேவுமெவ் வுலகமும்
நின்வடி வாக நிலைபெறக் காட்டி
என்றனை யாண்ட விணையிலா முதல்வ!
ஆணும் பெண்ணு மலியு மல்லாப்
பரஞ்சுட ருருவாய்ப் பற்றிலாப் பெரியோர்
கண்டிட வவர்தங் காசிலா வுளத்துத்

தோன்றி யருளுந் தூயவான் பொருளே!
செம்பொருஞ் சினைக டிசையெலாம் பரவும்
மருதடி மூலம் வடிவெனக் கொண்ட
ஐங்கரத் தொருவ! வாதி முதல்வ!
என்னுட றனையு மின்னருள் வடிவா
யாக்கி யாளுவை யந்தக னார்தம்
பாச வீக்கற பட்டிடா வணமே. (கஉ)

[ கதிர் - சூரியகிரணம். துகள் - அணு. ]

## வெண்பா

வண்ணம்பொ னின்னுடலம் வார்சடையிற் கொன்றையும்
மண்ணிலுபர் வர்த்தலையா மாநகதில்—நண்ணும் [பொன்
மருதடியி னீயுறையும் வான்கோயி லும்பொன்
அரிதோபொன் னீயீதற் கால். (கங)

## அகவற்பா

ஆல மிடற்றினோன் சால வருந்திய
வானவ ருய்யத் தானவர் மூவெயில்
விண்ணிடை வேவப் பண்ணிட வம்பொன்
றெய்டச் சென்ற வையத் தேரின்
அச்சினை யறுத்த மெச்சிடு முன்ப!
குற்ற மூன்று மிறறழிந் தொழியப்
பற்றறுத் தருளிப் முற்றுணர் முனிவரும்
இற்றென வறியா தூற்றநின் னியல்பைப்
பெற்றியான் முன்போ லுற்றிட வருளுவை
ஓமெனு மெழுத்தி னுள்ளொளி யாகித்
தோன்றிநின் னுண்மை தெரியக் காட்டும்
மாமரு தடியின வாழ்பெருந் தேவே. (கச)

[ ஆலம் - நஞ்சு. குற்றமூன்று - காமவெகுளிமயக்கம்
பற்று - ஆசை. ]

## வெண்பா

தேவே யமரர்க்குத் தேனே யடியவர்க்குக்
கோவே தனக்குத்தான் கொன்றைபந்தார்ப் — பூவேய்
சடைமுடியி னோடு தனிமருதின் கீழ்வாழ்
கடமா முகத்துக் கனி. (கரு)

[ கடமா - யானை. கனி - பழம். ]

### அகவற்பா

ஜனிந்தள முருகநின் கழலடி பரவிப்
பூசனை புரிந்த மாசிலா வுளத்தின்
ஔவை தனக்கிங் காண்டுபல வாழும்
நாளுஞ் ஞானமு நல்லுடல் வலியும்
புவியா ளரசரும் போற்றும் புலமையும்
யாவு மளித்தனை யிமையவர் வேண்டக்
கயமுகற் செற்று வயமது பெற்றனை
மன்னிய வன்பொடு வழிபட் டேத்தும்
பாண்டுதன் புதல்வ ராண்டிட வையம்
வமது கொடுத்தனை மற்றுஞ் செயல்கள்
அளந்திட முடிமோ வடியேன் றனக்கும்
நெஞ்சத் திடத்து நீடுவா சனைகள்
போக்கிநின் னடிக்கீ ழாக்கி யாளுவை
பண்ணைகள் சூழும் பருமரு தடியின்
நண்ணிய மதமா முகவொண் மணியே. (௧௬)

[ நாள் - ஆயுள். வயம் - வெற்றி. வையம் - பூமி.
பண்ணை - வயல்.

### வெண்பா

மணிதிகழும் பைந்தலைவெம் மாநாகந் திங்கள்
அணுகி மிகுநண்போ டமர — வணர்சடைமேற்
சூடுமொரு கோட்டன் றென்மருதின் கீழமர்வோன்
தாடொழுவார் வீடடைவார் தாம். (௧௭)

வணர் - வளைவு ]

### அகவற்பா

தாமுழந் தீட்டிய தோமில் பொருளுனும்
வேளாண் மாந்தர் தாளிழந்து வருந்த
ஆழும் புலர்ந்து கோளுந் திரிந்து
வானுந் தொலைந்த வறன்மிகு காலையும்
தன்னிடத் தருவிச் சின்னீ ருதவி
உலகம் புரக்குங் குலவரை போல
உள்ளது கொடுத்தும் வள்ளற் பெருமை
பெற்றே யறிகிலாப் பேதை மாந்தர்போல்

உற்றன் பேணும் பற்றுடை யிந்திரன்
வாழ்க்கையு மிந்த மண்ணோர் வாழ்க்கையும்
வேண்டல னின்பெரு மலரடி வேண்டுவன்
குவளைக் கானந் துவளப் பசட்டினஞ்
சென்றுபுல் லருந்தி துன்றுபல் வயல்கள்
சூழும் வருத்தலைத் தொன்மா நகரிடை
ஏனற் கதிர்போ லிலங்குவெண் மலர்கள்
விரிதருஞ் சினைகண் மேவு மருதடி
போற்றிட வமரரும் வீற்றிருந் தருளும்
மதமா முகத்தொரு வாணபெருங் கடவுளே. (கஅ)

[ஆர் - நீர். கோள் - கிரகம். தொலைதல் - நீட்டித்தல். வறல் - நீர் வற்றுதல்.]

## வெண்பா

கடவுளரும் போற்றுங் கழற்பே றருள்வாய்
உடலு மிராவணனை யுன்றன் — றடக்கைகொடு
பந்தினெறிந் தாடும் பரமா மருதடிவாழ்
இந்துமுடிக் கொண்டவிறை வா. (க௯)

உடலல் - பகைத்தல்.

## அகவற்பா

வான்பெரு மாயை மற்றெனை யகலவும்
பொறிக ளைந்தும் புலஞ்செலா துறவும்
மனமது பொறியின் வழிச்செல் லாது
நினைவ தொழிந்து நிலைநின் றிடவும்
உள்ளந் தன்னை யுற்றமுன் வினைகள்
தள்ளிப் பொறிவழி தாக்கா தொழியவும்
நின்னரு ளதன்கண் மன்னி நின்றே
இருந்த படியா னிருந்திட வருள்வாய்
மூவுல கிற்கும் முதற்பொரு ளாகி
இத்தலத் துற்ற வர்த்தலை நகரிற்
கண்ணெலாங் கவருங் கவின்பெறு கோயிலுள்
வழிபட் டிம்மையின் மற்றியா னுய்த்திட
மருதடி யைங்கர மாமுகத் திருவே. (உ0)

# அன்பர்கள் வழிபாடும்
# அவர்பெறுந் திருவருளும்

1. நிதமுந் தூய நெல்லளித்துஞ் செய்யின் வகைக டாமளித்தும்
புதிய பட்டம் பரமளித்தும் பரிவோ டடியார் நினக்கேபால்
இதமார் சனிக டாமளித்து மெய்தி னார்நின் பேரருளை
விதியி னொன்று மளியாதேன் மேவ லுண்டோ மருதீசா!

2. அறுகிற் பெற்றார் சிலர்மிகநின் னருளை வணங்கி யிடும் பூவின்
மறுகிற் பெற்றார் சிலரன்பாய் மகளி ரிலையிட் டுன்கோவில்
குறுகிப் பெற்றார் சிலர்சிலர்கை குவித்துப் பெற்றார் நின்னடியை
இறுகப் பற்றி வணங்கவில்லே னெய்த லுண்டோ மருதீசா!

3. அலகி னால்கள் களைந்துசில ரழகார் கோவி னிலங் கழுவிப்
பலகோ லங்கள் புனைந்துசிலர் பரிய வீதிப் புற்களைந்தே
இலகி விளங்கச் செய்துசில ரெய்தி னார்நின் பேரருளை
உலகி லொன்று மியற்றாதேன் உறுவ துண்டோ மருதீசா!

4. வாக்கிற் றுதித்துச்சிலபெற்றார் மனத்தா னினைந்துசிலர்பெற்றார்
ஆக்குஞ் செம்பொற் கோவிற்றனை யடியாற் சூழ்ந்து சிலர்பெற்றார்
தேக்கொ ளுன்ற னுருநோக்கிச் சீரோ டருளைச் சிலர்பெற்றார்
ஊக்கி யொன்று மியற்றாதே னுறுவ துண்டோ மருதீசா!

5 தூய தாய சாக்கிரத்திற் றொடரு மிக்க சொப்பனத்தின்
ஆய நல்ல சுழுத்திதனி லதன்மே லுற்ற துரியத்தில்
சேய தாகு மதீதத்திற் றிகழ வுன்னி யுன்வடிவை
மேயி னார்நின் னருளினையான் மேவ லுண்டோ மருதீசா!

6, ஆற தாகு மாதார மதிலே யாதி யாதாரத்
தாறு மன்பி னெடுமுன்னை யுறவே வைத்துப் பூசித்தே
நீறார் மேனி யடியார்க ணிலவு மரவுந் திகழ்சடையோய்!
பேறே மிகவும் பெற்றார்யான் பெறுவ துண்டோ மருதீசா!

7. வழிக ளிரண்டு மடைத்துள்ளே மருவுஞ் சுழுனை வழிதிறந்தே
தழுவி நிற்கு மாதாரந் தாண்டி யப்பாற் சென்றெய்திக்
கழிபே ராரு மங்குலங்கள் கடந்த வந்தந் தனினின்றே
தழுவி யுன்னு வெனக்குமருள் தருவ துண்டோ மருதீசா!

8. அகத்தி லெழுநின் சோதிவடி வடக்கித் தம்மை விழுங்கியிட
மிகத்தான் பார்த்தங் குனையுன்னி விடாது நிற்கு மேலோர்தாம்
இகத்தே நின்றன் பொருளை யெய்தக் கண்டும் மருதீசா
நகத்தா னின்றே னடியேன்நான் நாடுன் னருளைப் பெறுதென்
னோ?

9. அலையா தகத்தை வெளியாக்கி யப்பாற்சென்றே நின்னருள்சேர்
நிலையாம்பரமவெளியடைந்தேநிலைத்துநிற்கும்பெரியோர்போல்
இலையாயெல்லாமடங்கிடவெய்தும்வெளியாய்நிலைக்குகிலேன்
புலையேனெங்கண்வீடடைவேன்புகல்வாய்மருதிற்பெருமானே!

வேறு

அன்புடை யடியார் வந்துன் னடியிணை யருச்சித் தேத்தி
நின்புடை யருளை யெல்லாந் நினக்கிலா தெய்தி னாரோ
என்புடை யன்பு காணு தெனக்கருள் புரிந்தி லாயோ
மின்புடை மணிப்பொற் கோவின் மேவிடு மருதி லீசா!

# தைப்பூசச் சிறப்பு.

## கொச்சகப்பா

புலிமுனிக்கும் பதஞ்சலிக்கும் புரிநடவச் செயல்காட்டி
ஒலிபுனற்செஞ் சடைமுடியோ னுவந்திடுந்தைப் பூசமிதில்
சுலிமருதின் மூலமெழுங் கைம்மாவின் முகத்தமலன்
பொலிவடிவி னெழில்கண்டு போற்றியா முய்வோமே. (க)

தைப்பூசங் காணாதே போதிபொழூம் பாவாயென்
றுய்ப்புறுநல் வாக்கதனாற் சம்பந்த னுரைத்தவிநாள்
எப்பன்றி வடிவுமமாற் செய்தாதான் திருமகனே!
கைப்போது தூவிபுனைக் கழறெருபூவேற் கருள்வாயே. (உ)

## ஆசிரிய விருத்தம்.

ஐம்பெரும் புலன்க ளடக்கியே சேர வகமுறு கரணங்க ளொடுக்கி
எம்பிரானிந்தத்தைப்பெரும்பூசத் தேகமாமனத்தொடும்பணிந்தே
இம்பரி னுடல மன்பினிற் பொலிய வென்றுமா னந்தநன் மயமாய்
உம்பலின்முகனேயுனதருள்வெளியாயுற்றிடவருள்புரிவாயே. (௩)

பொய்ப்பொருளதனிற்சென்றிடுமியல்பைப்போக்கியேயென்மனந்
தன்னை
மெய்ப்பொரு ளாமுன் னடிதனில் வைக்க வேதமா முதல்வநீ
யருள்வாய்
எய்ப்புறு பிறவிப் பெருங்கடன் மூழ்கி யின்னம்யா னிடருறன்
முறையோ
தைப்பெரும்பூச நாளிது தன்னிற் சார்ந்தனன் மருதடிப்பொருளே.
(௪)

மருதடி மூலத் தெழுந்தவைங் கரனே மாபெருங் கடவுளே! யென்
றும்
கருதிநின் னடிகள் பேணுறு மடியார் கருமங்கள் முற்றுறச் செய்
வோய்
பொருதுமா முகனைக் கொன்றிடு விமலா! புவனங்கண் முதற்பணி
தேவே
வருதரு தையிற் பூசநா ளிதனின் மகிழ்ந்தெமக் கருள்புரிவாயே (௫

### வாழ்த்து

வாழி மருதடிவா ழைங்கரத்து மாமுதல்வன்
வாழி வருத்தலையா மாநகரும் — வாழிமழை
வாழிமறை யாகமமும் வாழிதவந் தானமுடன்
வாழியுயிர் பெற்று வளம்.

